Arimaa Nokku

# அரிமா நோக்கு

13:3 அக்டோபர் 2019

ISSN 2320-4842



ஆசிரியர்: ஈரோடு தமிழன்பன்

மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல்சார் பன்னாட்டுக் காலாண்டிதழ்

International Quarterly on Language, Art, Culture, History, Philosophy and Science

ISSN 2320-4842

அரிமா நோக்கு
13 : 3 அக்டோபர் 2019

நோபல் பரிசு 2018 & 2019
- வ. ஜெயதேவன் 03
புறநானூற்றில் வாய்மொழி வழக்காறுகள்
- ஆ. தனஞ்செயன் 05
பேரறிஞர் அண்ணா
- ச. சு. இளங்கோ 10
வள்ளலாரும் இரண்டு மரபுகளும்
- கு. பத்மநாபன் 12
இலக்கியத்தில் கீரைவகைகள்
- தி. கல்பனாதேவி 14
சங்க இலக்கிய உருவாக்கத்தில் சமயங்களின் பங்கு
- மு. இரமேசு 19
மயக்கம் என்ன?
- வெ. இராம்ராஜ் 27
தமிழில் செய்வினை, செயப்பாட்டு வினை
- சா. பன்னீர்செல்வம் 30
இந்திய மொழிகளும் தாய்மொழிகளும்
- ச. மனோகரன் 42
தமிழ் வளர்ச்சியில் மொழிபெயர்ப்புப் பணிகள்
- கி. சீனிவாசன் 52

# தலைவாயில்

ஈரோடு தமிழன்பன்

## மேல்வரும் கீழடி உண்மைகள்

கிழக்கில் நூறு விடியல் வானில் கிளர்ந்ததுபோல் கீழடி அகழ்வாய்வு தமிழர் தொன்மைப் பெருமையை உறுதிசெய்து ஆயிரம் உண்மைகளை உலகின் பார்வைக்கு எடுத்துவைத்துள்ளது. தமிழின் தொன்மை, வளம், தனித்தன்மை ஆகியவற்றையும் தமிழரின் நாகரிக, பண்பாட்டு விழுமியம், மேம்பாடு ஆகியவற்றையும் குறைத்து மதிப்பிட்டுச் சொல்வதையே குறிக்கோளாகக் கொண்ட ஆய்வாளர்கள் இப்போதும் கீழடி உண்மைகளைக் காலடியே போட்டு மிதிக்கவே துடிப்பாரகள்.

கீழடியில் கடவுள்கள் சார்ந்தும் சமயங்கள் சார்ந்தும் தடயங்கள் கிடைக்காத ஏக்கங்கள் ஓரம்போகியரான ஆய்வாளர்களை ஆட்டிப் படைத்துக்கொண்டுதான் இருக்கும். கிடைத்திருக்கும் ஆதன் என்னும் தூய தமிழ்ப் பெயரும் பழம்பண்டங்களில் காணப் படும் தமிழ் எழுத்துகளும் ஆரியச் சார்பற்ற தன்மையைப் பறைசாற்றுகின்றன.

தமிழ் எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ள 56 பானை ஓடுகளை இத்தாலி நாட்டுப் பைசாப் பல்கலக்கழக மண்ணியல் துறை ஆராய்ந்தது. கீழடிப் பகுதிக் கனிமங்கள் கொண்டே புழங்கு பொருள்களை அங்கு மக்கள் செய்திருக்க வேண்டுமென ஆய்ந்துரைத்தனர். நான்காவது கட்ட ஆய்வில் 5820 பொருட்களைத் திரட்டியுள்ளனர். சுடுமண் உறைக்கிணறுகள், மழைநீர் வடிகால்கள், தங்க அணிகலன்கள், இரும்புக் கருவிகள், வண்ணப் பூச்சுகள் கொண்ட மட்பாண்டங்கள், நெசவுத் தொழிலுக்குரிய கருவிகள், விளையாட்டுப் பொருள்கள். பெண்களுக்கென்று குளியல் அறைகள், இப்படி வியக்கத்தக்க வாழ்வின் சீரிய சின்னாங்கள். நான்காவது ஆய்வுக் கட்டம் 2018 கண்டெடுத்தவற்றுள் ஆறு பொருட்கள் அமெரிக்காவில் உள்ள ஆய்வுக் கூடத்திற்கு (Beata Analytic Lab, Miami, Florida) அனுப்பப்பட்டிருந்தன. ஆய்வு முடிவில் கீழடிப் பொருள்கள் பொது ஆண்டிற்கு 600 ஆண்டுகள் முற்பட்டவை என்ற உண்மை வெளிப்பட்டது. கீழடி மக்கள் 2600 ஆண்டு களுக்கு முன்னரே கல்வி அறிவு பெற்றவராய் மேம்பட்டிருந் தனர்.

இவ்வாய்வுகள், இன்றைய மேம்பட்ட அறிவியல் தொழில்நுட்பக் கோட்பாடுகளையும் கருவிகளையும் பயன்படுத்திக் காய்தல்

ISSN 2320-4842

உவத்தல் இல்லாத அறிஞர்களால் செய்யப்பட்டவை என்று நாம் அறிகிறோம். விளைவுகள் நம்மை வியப்பில் ஆழ்த்தியுள்ளன.

இவ்வுண்மைகளை இந்திய வரலாற்று அறிஞர்கள் இந்தியாவின் பெருமையாக ஒப்புவதோடு உலகிற்கு எடுத்துச்சொல்ல வேண்டும். இந்திய அரசு இவ்வாய்வு தொடர உதவுவவதோடு தமிழின் பெருமையை, தமிழரின் பெருமையை இந்தியரின் பெருமையாகக் கொண்டாட வேண்டும்.

◆

*ஆசிரியர்*
ஈரோடு தமிழன்பன்
*இணையாசிரியர்*
வ. ஜெயதேவன்
*ஆசிரியர் குழு*
கா. செல்லப்பன்
நா. கணேசன் (அமெரிக்கா)
நா. சுப்பிரமணியன் (கனடா)
பொன். செல்வகணபதி
ஒப்பிலா மதிவாணன்
சீதா லட்சுமி (சிங்கப்பூர்)
மு. பரமசிவம் (மலேசியா)
பத்மாவதி விவேகானந்தன்
இரா. பிரேமா
பா. இரவிக்குமார்
மருதூர் அரங்கராசன்
பெ. இலக்குமிநாராயணன்
*அறிவுரைக் குழு*
இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் உள்ள தமிழியல் அறிஞர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் படைப்பாளிகள்
*பதிப்பாளர்*
இரா. பன்னிருகைவடிவேலன்

## கட்டண விவரம்

வாழ்நாள் கட்டணம் ரூ. 3000/- US $ 150

புரவலர் கட்டணம் ரூ. 5000/- US $ 200

பெரும்புரவலர் கட்டணம் ரூ. 10, 000/- US $ 500

நிறுவனம்சார் உறுப்பினர் (Institutional Membership) ரூ. 15,000/- US $ 700

### விளம்பரக் கட்டணம்

பின்னட்டை (பல வண்ணங்கள்) ரூ. 15, 000/-

உள்ளட்டை (பல வண்ணங்கள்) ரூ. 10, 000/-

முழுப்பக்கம் (கருமை & வெண்மை) ரூ. 3, 000/-

அரைப்பக்கம் (கருமை & வெண்மை) ரூ. 1, 500/-

கட்டணம் செலுத்த: